**இந்திய உயர் ஸ்தானிகராலயம்**
**கொழும்பு**

***************

**ஊடக அறிக்கை**

# 150 இலங்கை மாணவர்களுக்கு மகாத்மா காந்தி புலமைப் பரிசில்கள்

பத்தரமுல்லையில் உள்ள கல்வி அமைச்சில் பெப்ரவரி 11ஆம் திகதி இடம்பெற்ற விசேட நிகழ்வொன்றில் கல்வி அமைச்சர் கௌரவ ஜி எல் பீரிஸ் மற்றும் இந்திய உயர் ஸ்தானிகர் கௌரவ கோபால் பாக்லே ஆகியோரால் 2018-19 ஆம் ஆண்டுக்குரிய அதிசிறப்பு வாய்ந்த மகாத்மா காந்தி புலமைப் பரிசில்கள் இலங்கையில் 25 மாவட்டங்களிலிருந்தும் தெரிவுசெய்யப்பட்ட 150 உயர்தர பிரிவு மாணவர்களுக்கு வழங்கப்பட்டது.

பலம்வாய்ந்த பிரிட்டிஷ்காரருக்கு எதிராக கடந்த நூற்றாண்டில் அஹிம்சையை ஆயுதமாக பயன்படுத்தி மகாத்மா காந்தி அவர்கள் எவ்வாறு போராடினார் என்பதையும் தனது போதனைகளுக்கு அமைவாகவ வாழ்ந்து காட்டிய மகாத்மா காந்தியின் பெருமைகளையும் அமைச்சர் ஜி எல் பீரிஸ் அவர்கள் தனது உரையில் குறிப்பிட்டிருந்தார். அத்துடன் அண்மையில் வடமாகாணத்தின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களுக்கு தான் மேற்கொண்டிருந்த விஜயத்தின்போது கிடைக்கப்பெற்றிருந்த அனுபவங்களையும், குறிப்பாக பல்வேறு சமூகங்கள் எவ்வாறு வேறுபாடுகளின்றி வாழ்கின்றன போன்ற விடயங்களையும் அவர் இங்கு பகிர்ந்திருந்தார். அத்துடன் மாணவர்கள் தாம் வளரும் பருவத்தில் இவ்வாறான கொள்கைகளை எப்பொழுதும் பின்பற்ற வேண்டும் எனவும் அவர் மாணவர்களுக்கு அறிவுரை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இலங்கைக்கு பல்வேறு விடயங்களிலும் உதவிகளை வழங்கிவரும் இந்திய அரசாங்கத்திற்கும் அமைச்சர் நன்றியினை தெரிவித்திருந்தார்.

மாணவர்களின் சாதனைகளை பாராட்டிய இந்திய உயர் ஸ்தானிகர், இந்திய அரசாங்கமும் இந்திய மக்களும் அதேபோல இந்திய உயர் ஸ்தானிகராலயமும் எந்தச் சந்தர்ப்பத்திலும் மாணவர்களுடன் இணைந்திருக்குமென மாணவர்களுக்கும் இலங்கையர்களுக்கும் உறுதியளித்திருந்தார். புத்தபெருமான் மற்றும் மகாத்மா காந்தி இடையிலான ஒற்றுமையை இந்த சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்டியிருந்த அவர், மிக வேகமாக வளர்ந்து வரும் இந்த உலகில் மகாத்மா காந்தியின் சிந்தனைகள் இன்னமும் பின்பற்றப்படுவதனையும் தனது உரையில் குறிப்பிட்டிருந்தார். இந்தியா மற்றும் இலங்கை இடையில் மிகவும் நெருக்கமான கலாசார உறவுகள் காணப்படுவதனை நினைவூட்டியிருந்த உயர் ஸ்தானிகர், கல்வி மற்றும் தொழில் துறையில் பரந்தசந்தர்ப்பங்களை கொண்டிருக்கும் இந்தியாவில் காணப்படும் சகல வாய்ப்புக்களையும் இலங்கை மாணவர்கள் பயன்படுத்த வேண்டுமெனவும் ஆலோசனை வழங்கியிருந்தார். எதிர்காலத்தில் இந்தியா மற்றும் இலங்கை ஆகிய நாடுகளின் பலத்திற்கான சிறந்த மூலவளமாக இலங்கை மாணவர்கள் காணப்படுவதாகவும் அவர் நம்பிக்கை வெளியிட்டிருந்தார்.

மகாத்மா காந்தி புலமைப்பரிசில் மட்டுமல்லாது பொறியியல், தொழில்நுட்பம் ,கலை, விஞ்ஞானம், துணை மருத்துவ கற்கைநெறிகள், சுதேசிய மருத்துவம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் வருடாந்தம் 750 புலமைப் பரிசில்களை இந்திய உயர் ஸ்தானிகராலயம் வழங்கிவருகின்றது. **‘ஸ்ரடி இன் இந்தியா”** என்ற நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மிகவும் பிரசித்தமான இந்திய கல்வி நிலையங்களில் இலங்கை மாணவர்களுக்காக ஆயிரக்கணக்கான ஆசனங்கள் ஒதுக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் ஏனைய கல்வி உதவிகள் தொடர்பான தகவல்களை பெற்றுக் கொள்வதற்கு இந்திய உயர் ஸ்தானிகராலயத்தின் இணையத்தளமான [www.hcicolombo.gov.in](http://www.hcicolombo.gov.in) என்றமுகவரியை பார்வையிடவும்.

**************

கொழும்பு
12 பெப்ரவரி 2021